## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பரங்கிப்பேட்டை.

**2023 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 27ம் நாள்**

**CC 151/2014**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. பாலசுப்ரமணியன் | வயது | : | |
| த.பெ. | : | திரு.கந்தராஜ் | தொழில் | : | |
| ஊர் | : | | ஜாதி | : | |
| மாவட்டம் | : | | மதம் | : | |
| காவல் நிலையம் | : | | நிலை | : | P.W.29 |

**Solemnly Affirmed in accordance with the Provision Act X of 1873 of the day of 27.10.2023**

**அரசு தரப்பில் முதல் விசாரணை –** கடந்த 30.04.2014 ம் தேதி கடலூர் மாவட்ட குற்றபிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். தற்பொழுது சென்னையில் வசித்து வருகின்றேன். கடந்த 01.03.2014 ம் தேதியன்று கடலூர் மாவட்ட குற்றப்பிரிவு ஆய்வாளராக பணியில் சேர்ந்தேன். 04.03.2014 ம் தேதி குற்ற எண் 306–2011, சட்டப்பிரிவுகள் 466, 465, 471, 420 இ.த.ச படியான வழக்கினை மறுவிசாரணை செய்ய துணை கண்காணிப்பாளர் மாவட்ட குற்றப்பிரிவு அவர்களிடமிருந்து விசாரணை மேற்கொண்டேன். வழக்கில் 8 சாட்சிகளை ஆய்வாளர் திரு. ஆரோக்கியராஜ் அவர்கள் விசாரணை செய்து மாதிரிவரைபடம் தயார் செய்து விசாரித்துள்ளார். பின்னர் அன்றைய தினமே வழக்கில் போலியாக வழங்கப்பட்ட பசுமை தீர்ப்பாய மனு எண் 77–2013 என்ற ஆவணத்தின் உண்மை தன்மை மற்றும் ஆவணத்தின் நகல், ஆவணத்தில் கையொப்பம் செய்த துணை பதிவாளர் திரு. குமார் என்பவரின் வாக்குமூலத்தினை கேட்டு பதிவாளர் அவர்களுக்கு கடிதம் நேரடியாக சென்னையில் கொடுத்தேன். கடிதத்திற்கு பதில் நான் 30.04.2014 ம் தேதி ஓய்வு பெறும் வரையில் கடிதத்திற்கான பதில் கிடைக்கவில்லை. எனவே மேற்கொண்டு விசாரணைக்கு வழக்கு கோப்புகளை காவல் துணைகண்காணிப்பாளர் அவர்களின் மேற்பார்வைக்கு கொடுத்தேன்.

**1, 2 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –** எந்த சாட்சிகளையும் நான் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். மாவட்ட காவல் கண்காணிப்பாளரின் உத்திரவின் படி பரங்கிப்பேட்டை காவல் நிலையத்திலிருந்து வழக்கினை மாவட்ட குற்ற பிரிவுக்கு மாற்றம் செய்ததின் அடிப்படையில் நாங்கள் விசாரணையை தொடர்ந்தோம். அதற்கான உத்திரவினை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். நான் சொல்வது போல உத்திரவு எதையும் நான் பார்க்கவில்லை என்றாலும் நீதிமன்ற உத்திரவினையும் நான் பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல. இந்த வழக்கில் எந்த புலன் விசாரணையையும் நான் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் எதிரிகளுக்கு பாதகமாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**3 முதல் 5 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.**

சாட்சி சொல்ல சொல்ல, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டியபின்பு அவர் சரியென கையொப்பமிட்டார்.

ஒம்/திரு.கி.சக்திவேல்,பி.காம்.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர் **பரங்கிப்பேட்டை கூ.மு.பொ.**